***குறிப்புப் பக்கம்***

# சிற்றுண்டி நேர செயல் முறை வரிசை

புதிய திறமைகளை கற்றுக்கொள்ளும் போது, பெரும்பாலான குழந்தைகளுக்கு உதவி தேவைப்படுகிறது. அந்த வழி முறைகளை சிறிது சிறிதாகப் பிரிப்பதனால், குழந்தை ஒவ்வொரு வழி முறையாக கற்க முடியும். ஒரு குழந்தையைப் பொருத்தே அந்த வழிமுறைகளைப் எத்தனை சிறு பாகங்களாக பிரிப்பது என்பது அமையும்.

உங்களுடைய குழந்தைக்கு ஒரு தொடர் படக்காட்சியை அளிக்க விரும்பலாம். இது அடிப்படையாக, தொடர் சித்திரங்கள் மூலமாக ஒரு பணியை முடிப்பதற்கு எடுக்க வேண்டிய வழிமுறைகளை எடுத்துக் காட்டுவதாகும். நீங்கள் நிஜமான புகைப்படங்களையோ, வரி வடிவங்களையோ, அல்லது படக் குறிப்புகளையோ பயன்படுத்தலாம். படக் காட்சித் தொடரைப் பயன்படுத்தும்போது, உங்களுடைய குழந்தையின் கண் பார்வையில் படும்படியாக அமையுங்கள். அந்தப் படத்தைக் குறிப்பிட்டு அதன் வழி முறைகளை உரக்கப்படித்துக் காட்டுங்கள்.

உங்களுடைய சொந்த செயல் முறை வரிசை விளையாட்டை உருவாக்க படங்களை பயன்படுத்தலாம். அந்தப் படங்களின் பிரதியை எடுத்து, பின்னர் அதை வெட்டி எடுத்து, அவற்றை வரிசைப்படி வைக்க உங்களுடைய குழந்தைக்கு பயிற்சி கொடுங்கள். அந்த படங்களை இரண்டு பிரதியாக எடுத்து, ஒரு தொகுதியை வரிசைப்படி அட்டையில் ஒட்டிவிடவும்,அதை பயன்படுத்தி, மற்றொரு பகுதியை உங்களுடைய குழந்தையை சரியாக வரிசைப்படுத்த வையுங்கள்.

***வீட்டில் பயன்படுத்துவதற்கான " சிற்றுண்டி நேர" செயல் முறைகள் வரிசை இங்கே கொடுக்கப்பட்டுள்ளது:***



மேஜையில் அமரவும்



சாப்பிடு



குடி



கழிவை/குப்பையை வெளியே தூக்கி எறி



பாத்திரங்களை கழுவும்
இடத்தில் வைக்கவும்



***பள்ளியில் பயன்படுத்தக்கூடிய"சிற்றுண்டிநேர" செயல் முறைகளின் வரிசை உதாரணங்கள் இங்கே கொடுக்கப்பட்டுள்ளன:***

முதுகுப் பையை எடுத்துக்
கொள்ளவும்



சிற்றுண்டியை வெளியே எடுக்கவும்



சாப்பிடு



குடி



கழிவை/குப்பையை தூக்கி எறியவேண்டும்



முதுகுப் பையை எடுத்த
இடத்தில் வை

